திரு. கொ. மாதப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாலக்கோடு தொகுதியில் கடந்த மாதம் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டு, அந்த தீயணைப்பு வண்டியில் பைப் பழையது, புதியதாக மாற்ற .......... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அரவக்குறிச்சி தொடர்புடையது.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரியில் பழைய .... (மணியடிக்கப்பெற்றது).

திரு. அன்பில் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேகமாகப் பரவும் தீயை அணைக்க தமிழக அரசு புதிய, நவீன இயந்திரங்களை எதுவும் வாங்கி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்குத்தான் காவிரி ஒப்பந்தத்தை விரைவுபடுத்திக்கொண்டு இருக்கிறோம்.

தாயகம் திரும்பிய மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா.

*2134—திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற நிலமற்ற தாயகம் திரும்பிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் வாழும் நிலமற்ற தாயகம் திரும்பிய மக்களுக்கு நத்தம் புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது. நத்தம் புறம்போக்கு மற்றும் ஆட்சேபணையற்ற நிலங்களில் ஆக்கிரமித்து வீடுகள்/குடிசைகள் கட்டியுள்ளதை வீட்டுமனைப் பட்டா வழங்கி வரன்முறை செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆலங்குளம் தாலுக்கா.

*7750—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :